தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 370

குழந்தை பராமரிப்பு

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண் :370

॥ श्रीः ॥

कौमारभृत्यम्

குழந்தை பராமரிப்பு

ஆசிரியர்:
வைத்ய விசாரத
இராஜராஜேச்வர சர்மா,
ஆயுர்வேத ஆராய்ச்சியாளர்,
மத்திய அரசாங்க ஆயுர்வேத நூல் ஆராய்ச்சித் துறை,
சரஸ்வதி மஹால் நூலகம், தஞ்சாவூர்,
(முன்னாள் வேங்கடரமணா ஆயுர்வேத கலாசாலை
ஆசிரியரும், மேற்படி வைத்தியசாலை வைத்தியரும்)

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

2005 விலை : ரூ. 15-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	: குழந்தை பராமரிப்பு
பதிப்பாசிரியர்	: C. இராஜராஜேச்வர சர்மா
வெளியிடுபவர்	: இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்	: 370
மொழி	: சம்ஸ்கிருதம் - தமிழ்
பதிப்பு	: மூன்றாம் பதிப்பு
வெளியீட்டு நாள்	: 2005
தாள்	: TNPL 18.6 kgs.
நூல் அளவு	: 21 x 14 c.m.
பக்கங்கள்	: 40
படிகள்	: 1000
எழுத்து	: 16 & 12
அச்சிட்டோர்	: சரசுவதி மகால் நூலகம்
புத்தகக்கட்டு	: மெலிந்த அட்டை
பொருள்	: மருத்துவம்
விலை	: ரூ. 15-00

வெளியீட்டாளர் முகவுரை

குழந்தை பராமரிப்பு எனும் தலைப்பில் சமஸ்கிருதம் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தற்போது மூன்றாம் பதிப்பாக வெளியிடப்பெறும் இந்த ஆயுர்வேத நூல் வைத்திய விசாரத இராஜராஜேச்வர சர்மா எனும் ஆயுர்வேத வல்லுநரால் எழுதப் பெற்றதாகும். சரகஸம்ஹிதை, ஸுச்ருத ஸம்ஹிதை முதலிய தொன்மையான ஆயுர்வேத நூல்களில் கூறப்பெற்றிருக்கும் அரிய செய்திகளைத் திரட்டி, அவருடைய ஆழ்ந்த ஆயுர்வேத மருத்துவப் புலமையோடு இச்சிறு நூலைப் பதிப்பித்துள்ளார் . மூலநூலில் வடமொழிப் பகுதியை அப்படியே எடுத்துக்கூறி அதன் தமிழாக்கம், பின்பு விளக்கம் ஆகியவற்றையும் தந்துள்ளார்.

இந்திய பாரம்பரிய மருத்துவ முறைகளை போற்றுவோர் அனைவருக்கும் இந்நூல் மிகவும் பயன்படும் வகையில் அமைந்துள்ளது. இந்நூல் சிறப்புற வெளிவர துணைநின்ற சரசுவதி மகால் நூலக

நிருவாக அலுவலர் திரு. இரா. சுப்பிரமணியன், வெளியீட்டு மேலாளர் டாக்டர் குடவாயில் பாலசுப்ரமணியன் ஆகியோருக்கும், பதிப்புத்துறை பணியாளர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

இந்நூலினை அச்சிட நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மா. வீர சண்முக மணி, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
29 - 6 - 05

PREFACE

Three pamphlets on Health and Hygiene have already appeared through this Journal under the titles AYURVEDOPADESA, Parts I and II and GARBHINI RAKSA. The former deals with the codes of health relating to the daily routine of life and the latter with topics pertaining to maternity. As a logical sequence, the present pamphlet KAUMARABHRTYA deals with childwelfare and sets forth at length the rules for the proper nursing and upbringing of children. Topics like the treatment to be given to a baby immediately at birth, the feeding of the new-born baby and the variation of diet at various stages of its growth, the bedding and clothing for children and preventive and curative treatment of child-diseases are all explained in this pamphlet. In short, this pamphlet makes available, in an easy language, the knowledge of the salient principles of child-nurture necessary for mothers and nurses.

Here, as in the case of the previous pamphlets of this series, the important materials culled from the standared classics of Ayurveda are given in original Sanskrit with a clear and easy rendering in Tamil so as to be of practical use even to the lay readers who are unacquainted with the technical language of Medical Literature. It is our proposal to follow up this series with another work of this kind and by the same author on this subject of Diet entitled 'Pathyaa Pathya'. dealing with "Food, Prescribed Unprescribed".

It is our fervent hope that this series will be welcomed by all aspirants of health and longevity and that, being an easy popular

and practical guide on Health and Hygiene, this would find a place in every home.

The learned author Vaidya Visarada, C. Rajarajeswara Sarma, very richly deserves our thanks for having contributed this serial to our Library Journal and, far more than that, our hearty congratulations are due to him for having rendered a useful service to the public through thiswork.

N. KANDASWAMY,
Honorary Secretary,
T. M. S. S. M. Library.

Thanjavur
6-4-71

PREFACE TO THE SECOND EDITION

"The Child is father of the man," and so we have to take care of it and nurture it well from the very date of its birth.

The present work, viz., "KAUMARA BHRTYAM" (Nurture of Children) it may rightly be called a sequel to "GARBHINI RAKSHA (care of a pregnant woman), is the reprint of the off-print of our Library Journal. This book is in Sanskrit with a translation in Tamil. The translation is simple and lucid. As this book prescribes methods to nurture the child in an easily understandable manner, we hope that this will certainly find its way to the hands of the nursing mothers, and the doctors and the nurses who are in the department of Obstetrics.

We are pleased to place on record our thanks to the Government of India for their grant to do the reprinting of this useful work.

Our thanks are also due to the entire staff of the Library for their enthusiasm and co-operation in reprinting this work.

D. SUNDARESAN, I. A. S.,
District collector & Chairman,
of the T.M.S.S.M. Library,
Thanjavur.

Thanjavur,
7-8-1980

முன்னுரை

இன்றைய குழந்தை, நாளை நம் பாரதநாட்டைக் காக்கும் வாலிபனாவான். ஆகவே உடலுக்கும் உள்ளத்திற்கும் தீமையைப் பயக்கும் பழக்கங்களை பழகிக் கொள்ளாதிருக்கும் வண்ணமும், நன்மையை பயக்கும் பழக்கங்களை நன்கு பழகிக்கொள்ளும் வண்ணமும், குழந்தையை, பிறந்ததிலிருந்தே பேணிக்காக்க வேண்டுமென்பது பெற்றோர்களின் முதற் கடமையாகு மென்பதை மறக்கவோ மறுக்கவோ முடியாதல்லவா !

குழந்தையைச் சிறந்த முறையில் பேணிக்காக்கப் பின்பற்றப்பட வேண்டியனவாக சரகஸம்ஹிதை, ஸுச்ருத ஸம்ஹிதை முதலிய ஆயுர்வேத நூல்களில் கூறப் பட்டிருக்கும் அரிய அம்சங்களை ஒன்று கூட்டி எல்லோருக்கும் பயன்படுமாறு விரிவான மொழிபெயர்ப் புடனும், ஆங்காங்கு அனுபவத்தில் கண்ட உண்மைகளுடனும், "குழந்தை பராமரிப்பு" என்னும் பெயரால் வெளியிடக் கருதி இந்நூலை எழுதலானேன்.

இந்நூலை இப்பொழுது பேரன்புடன் வெளியிட்டு உதவிய தஞ்சை ஸரஸ்வதி மகால் காரியதரிசி உயர்திரு நீ. கந்தசாமிப் பிள்ளையவர்களுக்கும், மேலும் நூலகக் காப்பாளர் உயர்திரு V.கோபால ஐயங்கார், M. A., அவர்களுக்கும், இதைத் தொகுப்பதில் பெரிதும் வழிகாட்டி ஊக்குவித்துதவிய எனது குரு,உயர்திரு V. S. வெங்கடசுப்ரமண்ய சாஸ்திரிகள் (தலைமை ஆராய்ச்சியாளர் மத்திய இந்திய வைத்திய நூலாராய்ச்சித்துறை, சரஸ்வதி மஹால், தஞ்சாவூர்) அவர்களுக்கும், தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட எனக்கு இந்தத் தமிழ்மொழி பெயர்ப்பில் உதவி புரிந்த நண்பர், புலவர் திரு. S.இராமலிங்கம்பிள்ளை அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஸரஸ்வதி மஹால்,
தஞ்சாவூர்.

G. ராஜராஜேச்வர சர்மா.

॥ श्रीरस्तु ॥

॥ कौमारभृत्यम् ॥

குழந்தை பராமரிப்பு

वन्देऽमृतधरं देवमात्रेयादीन्महात्मनः ।
वैद्यरत्नं गुरुश्च श्रीकृष्णवारियराह्वयम् ॥

பிறந்த குழந்தைக்கு உடனே செய்ய வேண்டியது-

अथ जातस्योल्बमपनीय मुखं च सैन्धवसर्पिषा विशोध्य घृताक्तं मूर्ध्नि पिचुं दद्यात् । -सुश्रुतसंहिता

பிறந்த குழந்தையின் உடம்பைச் சுற்றியிருக்கும் சவ்வை அகற்றுவதுடன் முகத்தையும் (வாய், தொண்டை) இந்துப்பு கலந்த நெய்யால் சுத்தம் செய்து, நெய்யில் தோய்த்த துணித்துண்டை குழந்தையின் உச்சந்தலையில் வைக்கவேண்டும். (ஸுச்ருத ஸம்ஹிதா)

நெய் தோய்த்த துணித்துண்டை பிறந்த குழந்தையின் உச்சியில் படிய வைப்பதால் குழந்தைக்கு பிறக்கும் பொழுது ஏற்படும் உடம்புவலி, களைப்பு முதலிவை நீங்குகின்றன.

ஸாதாரணமாய் வழக்கத்தில் குழந்தையின் உச்சியில் தடவுவதற்கு ஆமணக்கெண்ணெய் பயன்படுத்தப் படுகிறது. தனித்த நெய் அல்லது ஆமணக்கெண்ணையின் உபயோகத்தைக் காட்டிலும் குழந்தையின் உச்சியில் இடுவதற்கு "பலாதான்வந்தர தைலம்" (बलाधान्वन्तरतैलम्) என்னும் தைலம் மிகவும் சிறந்தது. இதை ஆயுர்வேத வைத்தியர்களின் வழியாகப் பெறலாம்.

குழந்தையின் உச்சியில் எண்ணெய் இடும் இம்முறையைத் தொடர்ந்து சில மாதங்கள் வரையிலும் கையாளுவதால் குழந்தையின் மண்டை ஓடுகளுக்கு வலு உண்டாகின்றது. கண், காது முதலிய பொறிகளுக்கும் வலிமை ஏற்படுகின்றது. குழந்தையைக் குளிப்பாட்டிய பின்பும் உச்சியில் இந்த தைலத்தை தடவி வைப்பது மிகவும் நல்லது.

இந்த காலத்தில் சௌகரியத்தை முன்னிட்டுப் பிரசவம் பெரும்பாலும் மருத்துவமனைகளில் நடைபெறுவதால் அங்கு இம்முறையைக் கையாளுவது இயலாத காரியமாயினும் வீட்டிற்கு வந்தது முதல் தொடர்ந்தாவது குழந்தைக்குத் தினந்தோறும் உச்சியில் இவ்வாறு எண்ணெய் இடும் முறையைத் தவறாமல் பின்பற்றுவது மிகவும் நல்லது.

குழந்தை பிறந்த சிறிது நேரத்திற்குள் குழந்தையின் மல மூத்திரங்கள் வெளியாவது மிகவும் அவசியம். ஆகவே இதை கவனித்து மலமூத்திரங்கள் வெளியாவதில் அதிக தாமதமேற்படுமானால் அவற்றை வெளிவரச் செய்யத்தக்க முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

தொப்புள்கொடி நறுக்குதல் -

ततो नाभिनाडीमष्टांगुलमायम्य सूत्रेण बद्ध्वा छेदयेत् ।

–सुश्रुतसंहिता

பிறகு தொப்புள்கொடியை எட்டு விரல் அளவு நீட்டி நூலினால் கட்டி கத்தரிக்க வேண்டும்.

(ஸுச்ருத ஸம்ஹிதா)

தொப்புள் கொடியில் ரத்த ஓட்டம் முற்றிலும் அடங்கிய பின்புதான் மிக கவனத்துடன் கொடியை நறுக்கவேண்டும். ஆகையால் இதை நல்ல பழக்கமுள்ளவர்களைக்கொண்டு செய்விக்கவேண்டும்.

தொப்புளுக்குத் தைலம் -

नाभिं च कुष्ठतैलेन सेचयेत् । -अष्टाङ्गहृदयम्

தொப்புளை "கோஷ்டம்" என்னும் மருந்துச் சரக்கை சேர்த்துக் காய்ச்சிய தைலத்தினால் நனைக்கவேண்டும். (தொப்புளுக்கு தைலத்தை நன்கு பூசவேண்டும்) (அஷ்டாங்க ஹ்ருதயம்)

இந்த தைலம் குழந்தைக்கு தொப்புளில் புண் உண்டாகாமல் காப்பதுடன், வயிற்றில் வாயு தொந்திரவு வராமலும் தடுக்கிறது. அரை தோலா கோஷ்டத்தை அரைத்து சுமார் அரைப்பலம் நல்லெண்ணெயில் போட்டுக் காய்சித் தைலத்தைத் தயார் செய்து கொள்ளலாம்.

குழந்தைக்குத் தங்கத்தை கொடுப்பது-

अथ कुमारं शीताभिराश्वास्य जातकर्मणि कृते मधुसर्पिरनन्तचूर्णमंगुल्याऽऽनामिकया लेहयेत् ।

-सुश्रुतसंहिता

பிறகு குழந்தையை குளிர்ந்த ஜலத்தினால் தேற்றி, ஜாதகர்ம என்னும் சடங்கு செய்யப்பட்டதும் தேன், நெய், தங்கத்தூள் ஆகியவற்றைக் கலந்து மோதிரவிரலால் இட்டு உட்கொள்ளச் செய்ய வேண்டும். (ஸுச்ருத ஸம்ஹிதா)

சுமார் பத்துத்துளி பசுநெய், ஐந்தாறுதுளி தேன் கடுகளவு தங்கத்தூள் இவற்றை ஒன்றாகக் கலந்து குழந்தைக்கு ஊட்ட வேண்டும்.

குழந்தைக்கு முதல் ஆண்டு முடியும் வரையில் தினந்தோறும் தங்கத்தைக் கொடுப்பது மிகவும் நல்லது. ஒரு வசம்புத் துண்டை கொஞ்சம் பசும்பாலில் மிருதுவாகும் வரையில் ஊறவைத்தெடுத்து அதன் மத்தியில் ஒரு தங்கக்கம்பியைச் சொருகி வைத்துக் கொண்டு இதை தினந்தோறும் காலையில்

முலைப்பாலில் சிறிது உரைத்து குழந்தைக்குக் கொடுக்கலாம். அல்லது ஒரு வசம்புத் துண்டைப் பசும்பாலில் வேகவைத்துக் காயவைத்துத் தூள் செய்து வைத்துக்கொண்டு சிறு பயறளவுத் தூளைச் சிறிது சுறசுறப்பாக இருக்கும் தங்கப்பாலாடையில் போட்டு முலைப்பால் விட்டு கல்வக்குழவியினால் நன்றாகத் தேய்த்து அதை குழந்தைக்கு ஊட்டலாம்.

குழந்தைக்குத் தங்கத்தைக் கொடுப்பதின் பலன்-

सुवर्णप्राशनं ह्येतन्मेधाग्निबलवर्धनम् ।
आयुष्यं मङ्गलं पुण्यं वृष्यं वर्ण्यं ग्रहापहम् ॥
मासात्परममेधावी व्याधिभिर्न च धृष्यते ।
षड्भिर्मासैः श्रुतधरः सुवर्णप्राशनाद्भवेत् ॥ -काश्यपसंहिता

குழந்தைக்குத் தங்கத்தை உட்கொள்ளச்செய்வது தாரணாசக்தி, பசித்தீ, வலு இவற்றை வளர்க்கிறது. ஆயுளை வளர்க்கிறது. மங்களகரமானது. புண்ணியகரமானது. ஆண்மையை வளர்க்கிறது. சர்மத்திற்கு ஒளியை உண்டாக்குகிறது. கிரஹ தோஷத்தைப் போக்குகிறது. தங்கத்தை ஒருமாதம் உட்கொள்வதால் மிகுந்த தாரணா சக்தியுடன் ஆகின்றான். நோய்களால் தாக்கப் படுவதில்லை. ஆறு மாதங்கள் உட்கொள்வதால் ஒரு தடவை கேட்டதையே நினைவில் வைத்துக்கொள்ளும் திறமை கொண்டவனாக ஆகின்றான். (காசியபஸம்ஹிதா)

குழந்தைகளுக்கு நீராட்டல் -

ततो बलातैलेनाभ्यज्य क्षीरवृक्षकषायेण सर्वगन्धोदकेन वा रूप्यहेमप्रतप्तेन वा वारिणा स्नापयेदेनं कपित्थपत्रकषायेण वा कोष्णेन यथाकालं यथादोषं यथाविभवं च । - सुश्रुतसंहिता

பிறகு குழந்தையை பலாதைலம் என்னும் தைலத்தை தேய்த்து, பருவத்திற்கும், வாயு முதலிய

தோஷங்களுக்கும், செல்வத்திற்கும் ஏற்றவாறு அத்தி, இத்தி, அரசு, ஆல் ஆகிய பால் மரங்களின் பட்டையுடன் காய்ச்சிய கஷாயத்தினாலாவது, ஏலக்காய், லவங்கப்பட்டை, லவங்கம், லவங்கப்பத்திரி, அகில்கட்டை போன்ற மணமுடைய பொருள்களால் தயாரிக்கப்பட்ட கஷாயத்தினாலாவது வெள்ளி, தங்கம் இவற்றைக் காய்ச்சி முழுகச் செய்வதால் சூடான ஜலத்தினாலாவது, இளஞ்சூடாக இருக்கும் விளாமர இலைக் கஷாயத்தினாலாவது குளிப்பாட்ட வேண்டும். (ஸுச்ருதஸம்ஹிதா)

குழந்தையின் உடம்பைத் தேய்ப்பதற்குச் சோப்பைவிட முழுப் பச்சைப்பயிர்த்தூளை உபயோகிப்பது மிகவும் சிறந்தது. இது சர்மத்திற்கு ஒளியையும் கொடுக்கும். பலா தைலம் என்பது பலா தான்வந்தர தைலத்தைக் குறிக்கும்.

குழந்தையை வாந்தி எடுக்கச் செய்தல்-

ततः सैन्धवोपहितेन सर्पिषा गर्भोदकानि वामयेत्। तथा चास्योरः कण्ठविशुद्ध्या लाघवमभिलाषश्च जायते। –अष्टाङ्गसंग्रहः

குழந்தைக்கு இந்துப்பு கலந்த நெய்யால் கர்ப்ப நீரை வாந்தி செய்விக்கவேண்டும். இவ்வாறு கர்ப்ப நீரை வெளியேற்றுவதால் குழந்தைக்கு நெஞ்சு, தொண்டை ஆகியவை சுத்தமாவதால் உடம்பில் கனமின்மை, உணவில் விருப்பம் ஆகியவை உண்டாகின்றன. (அஷ்டாங்கஸங்கிரஹம்)

குழந்தை கர்ப்ப நீரைப்பருகி இருக்கிறதா என்பதைக் கவனித்து அவ்வாறிருக்குமானால்தான் வாந்தி எடுக்கச் செய்யவேண்டும்.

குழந்தைக்கு முதல்நாள் உணவு

सिराणां हृदयस्थानां विवृतत्वात्प्रसूतितः।
तृतीयेऽह्नि चतुर्थे वा स्त्रीणां स्तन्यं प्रवर्तते ॥

तस्मात्प्रथमेऽहनि अनन्तामिश्रिते मधुसर्पिषी मन्त्रपूते त्रिकालं पाययेत् । -अष्टाङ्गसंग्रहः

இதயத்திலுள்ள ஸிரைகள் விரிதல் காரணமாக பிரசவித்தபின் மூன்றாவது அல்லது நான்காவது நாளில் பெண்களுக்கு முலைப்பால் உண்டாகிறது. ஆகையால் முதல்நாளில் வெள்ளறுகுடன், நெய், தேன் இவற்றைக் கலந்து மந்திரத்தால் புனிதமாக்கி மூன்று வேளைகளிலும் குழந்தையை உட்கொள்ளச் செய்யவேண்டும். (அஷ்டாங்கஸங்க்கிரஹம்)

குழந்தைக்கு இரண்டாவது மூன்றாவது நாட்களில் ஆகாரம்

द्वितीये लक्ष्मणासिद्धं सर्पिस्तृतीये च । -अष्टाङ्गसंग्रहः

குழந்தையை இரண்டாவது மூன்றாவது நாட்களில் லக்ஷ்மணப்பஞ்சு என்னும் மூலிகையைச் சேர்த்துக் காய்ச்சிய நெய்யை உட்கொள்ளச் செய்யவேண்டும். (அஷ்டாங்கஸங்க்ரஹம்)

லக்ஷ்மணப் பஞ்சு என்னும் மூலிகை கொடி இனத்தைச் சார்ந்தது. இது கேரள நாட்டில் ஏராளமாகக் கிடைக்கிறது. இதற்கு கேரள மொழியில் "திருதாளி" என்று பெயர். லக்ஷ்மணப்பஞ்சு கிடைக்காவிடில் கண்டங்கத்திரி வேரைப் பயன்படுத்தி நெய்யைத் தயார் செய்யலாம். கண்டங்கத்திரி நுரையீரல் சம்பந்தமான இருமல், க்ஷயம் போன்ற நோய்களைத் தடுக்கும் சக்தியுடையது.

குழந்தைக்கு நான்காவது நாள் முதல் உணவு

ततः प्राङ्निवारितस्तन्यस्य स्वपाणितलसम्मितं सर्पिः द्विकालं दापयेदनन्तरं च स्तन्यमिष्टतः - अष्टाङ्गसंग्रहः

நான்காவது நாளில் முன்பு (மூன்று நாளாக) முலையுண்ணாமலிருந்த குழந்தைக்கு, குழந்தையின்

உள்ளங்கை கொள்ளுமளவு நெய்யை இரண்டு வேளைகளிலும் உட்கொள்ளச் செய்யவேண்டும். பிறகு விருப்பம்போல் தாய்ப்பாலைப் பருகச் செய்யலாம்.

(அஷ்டாங்கஸங்க்ரஹம்)

குழந்தைக்குத் தாய்ப்பால்தான் சிறந்தது

मातुरेव पिबेत् स्तन्यं तत्परं देहवृद्धये । - अष्टाङ्गहृदयम्

குழந்தை தாயின் முலைப்பாலையே பருகவேண்டும். அது உடல் வளர்ச்சிக்கு மிகவும் ஏற்றது. (அஷ்டாங்கஹிருதயம்)

தாய்ப்பால் குழந்தைக்கு வெறும் போஷாக்கு அளிப்பதோடு நின்றுவிடுவதில்லை. நோய்களைத் தடுக்கும் எதிர்ப்புச் சக்தியையும் அளிக்கிறது. சிசுவின் உடம்பில் ஒரு சிறு காயம் அல்லது கொப்புளம் ஏற்பட்டால் அந்த நோய்க்கிருமிகளை எதிர்த்துப் போராடி அழிக்கும் போர் வீரர்களை (Anti Bodies) தாய்ப்பாலிலிருந்துதான் குழந்தை பெற இயலும். இந்த சக்தியை பசும்பாலிலிருந்தோ, புட்டிப்பால்களிலிருந்தோ பெறமுடியாது. தாய்ப்பாலுக்கு இணையானது மற்றொன்றில்லை என்று நவீன மருத்துவ விஞ்ஞானிகள் கூறுகின்றனர். குழந்தை தாயின் முலையைக் குடிப்பதால் தாயின் கருப்பையும் விரைவில் நன்றாய் சுருங்குமென்றும் நவீன மருத்துவ விஞ்ஞானிகள் கண்டுள்ளார்கள்.

குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கும் முறை

तत्र माता प्रशस्ताङ्गी चारुवस्त्रा पुरोमुखी ।
उपविश्यासने सम्यग्दक्षिणं स्तनमम्बुना ॥
प्रक्षाल्येषत्परिस्राव्य मन्त्राभ्यामभिमन्त्रितम् ।
उदङ्मुखं शिशुं क्रोडे शनैस्सन्धाय पाययेत् ॥ -भावप्रकाशः

சிறந்த உடலுறுப்புக்களைக்கொண்டவளும், அழகிய ஆடையை அணிந்தவளுமாகிய தாய் கிழக்கு நோக்கி இருந்து மணையில் அமர்ந்து வலது மார்பகத்தை நீரால் நன்றாகக் கழுவி, சிறிது பாலை வெளியேற்றி மந்திரங்களால் மந்திரிக்கப்பட்ட மார்பகத்தை குழந்தையை வடக்குமுகமாக இருக்கும்படி மடியில் மெதுவாக அணைத்துக்கொண்டு பருகச் செய்ய வேண்டும். (பாவபிரகாசம்)

பால் கொடுத்தவுடன் குழந்தையைத் தாயார் தன் தோளின்மீது ஒரு தடவை அல்லது இரண்டு தடவை ஏப்பம் விடும்வரை சாத்திக்கொண்டு சில நிமிடங்கள் கழித்து தொட்டிலில் ஒருக்கணித்து இடது பக்கமாக படுக்கவைக்க வேண்டும். பால் குடித்த குழந்தையை உடனே மல்லாந்த நிலையில் படுக்கவைப்பதால் குடித்த பால் வாந்தியாகக்கூடும். மேலும் வாந்தியாகும்போது அந்தப்பால் நுரையீரலுக்குள் போக நேர்ந்து குழந்தைக்கு மூச்சுத் திணறலை உண்டு பண்ணிக் குழந்தையின் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கவும் இடமுண்டு.

குழந்தைக்கு ஒரு தடவை பால் கொடுத்த பிறகு முலையில் பால் எஞ்சியிருந்தால் அந்த எஞ்சியுள்ள பாலை தாய் வெளியேற்றிவிட வேண்டும். அப்பொழுதுதான் முற்றும் காலியான முலையில் மீண்டும் பால் சுரக்கும். காலையில் முதல் தடவையாக இடது மார்பிலிருந்து பால் கொடுத்தால் அடுத்த தடவை வலது மார்பிலிருந்து பால் கொடுக்கவேண்டும். சிறிது நேரத்திற்குப் பிறகு குழந்தையை இடது பக்கத்து மார்புக்கு மாற்றவேண்டும். பால் சரியானபடி சுரப்பதில் தடை ஏற்படாதிருக்க இப்படி மாற்றி மாற்றி பால் கொடுப்பது சிறந்த வழியாகும்.

சிறிது பாலை வெளியேற்றாமல் பால் கொடுப்பதின் தீங்கு

असावितं स्तनं बालः पिबन् स्तन्येज भूयसा ।
पूर्णस्रोता वमीकासश्वासैर्भवति पीडितः ॥ -भावप्रकाशः

சிறிது பால் வெளியேற்றப்படாமலிருக்கும் முலையைப் பருகும் குழந்தை அதிகமாக இருக்கும் பாலால் நிரைந்த உணவுக்குழல் கொண்டதாவதால் வாந்தி, இருமல், மூச்சுத்திணரல் ஆகியவற்றால் பாதிக்கப்படுகிறது. (பாவப்பிரகாசம்)

குழந்தைக்குத் தாய்ப்பால் தகாத நிலை-

. . . . . . स्तन्यं पाययेन्नाजीर्णौषधं च बालमिति ।

-अष्टाङ्गसंग्रहः

உட்கொண்ட மருந்து ஜீரணமாகாத நிலையில் குழந்தையைப்பால் பருகச் செய்யலாகாது.

(அஷ்டாங்கஸங்கிரஹம்)

கக்கும் குழந்தை தக்கும் -

स्वयं छर्दयते यस्तु पीतं पयः शिशुः ।
न तं कदाचिद्बाधन्ते व्याधयो देवमानुषाः ॥

- काश्यपसंहिता

எந்தக் குழந்தை பாலைக் குடித்துத் தானே கக்குகிறதோ அந்த குழந்தைதை தெய்வ சம்பந்தமான நோய்களும் (கிரஹம் பிடித்தல் முதலியவை) மானிடர்களுக்குண்டாகும் நோய்களும் (ஜ்வரம் முதலியவை) பீடிப்பதில்லை. (காச்யபஸம்ஹிதா)

குழந்தை அஜீரணக் குறிகளுடன் கக்குமானால் ஏற்றவாறு மருத்துவம் செய்யவேண்டியதே.

தாய்ப்பாலின்மைக்குக் காரணம் -

रुक्षान्नपानकर्शक्रोधशोककामादिभिः स्तन्यनाशः ।

-अष्टाङ्गसंग्रहः

स्त्रीणां स्तन्यं भवेत्स्वल्पं गर्भन्तरविधारणात् ।-

-भावप्रकाशः

வறண்ட உணவு, வறண்ட பானம், இளைக்கச் செய்பவை. கோபம், துயரம், காமம் முதலியவற்றால் தாய்ப்பால் வற்றிப்போகும். (அஷ்டாங்கஸங்கிரஹம்)

பெண்டிர்க்கு மற்றொரு கருத்தறிப்பதாலும் பால் குறைந்துவிடும்.

தாய்ப்பால் உண்டாக்குபவை -

स्तन्यजननानि तु मद्यानि शीधुवर्ज्यानि, आनूपमांसानि, स्वाद्वम्ललवणप्रायाश्चाहाराः क्षीरिण्यश्चौषधयः, क्षीरपानमनायासः सौमनस्यं च । - अष्टाङ्गसंग्रहः

கருப்பஞ்சாற்றுமது நீங்கலான மதுவகைகளும், சதுப்பு நிலத்தில் வாழும் பிராணிகளின் மாமிசம், திரவத் தன்மை கொண்டவையும், பெரும்பாலும் இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு இச்சுவைகளைக் கொண்டவையுமான உணவுப் பொருட்கள் பாலைக் கொண்டுள்ள மூலிகைகள் (கீரைப்பாலை, புடல், சுரை, பூண்டு, அதிமதுரம், தேங்காய், திராக்ஷை, பச்சைப்பயிறு, உளுந்து, கோதுமை, வாதுமைப் பருப்பு, பிஸ்தாப் பருப்பு முதலியவை) பால் பருகுதல் களைப்பூட்டும் செயல் புரியாமை நல்லமனம் ஆகியவை தாய்ப்பாலை உண்டாக்குகின்றன. (அஷ்டாங்கஸங்கிரஹம்)

கூஷ்மாண்ட ரஸாயனம், அச்வகந்தா ரஸாயனம், விதார்யாதிகிருதம், தசமூலாரிஷ்டம், திராக்ஷாரிஷ்டம் ஆகிய இந்த உடல் தேற்றி மருந்துகளைச் சாப்பிடுவதாலும் தாய்ப்பால் அதிகமாகும். ஒரு நாளைக்கு ஆறு தடவைகளுக்குக் குறையாமல் குழந்தைகளுக்குப் பால் ஊட்டிக்கொண்டேவருவதும் தாய்ப்பால் அதிகமாவதற்கு உதவி புரியும்.

பருகச் செய்யத் தகாத தாய்ப்பால் -

न च क्षुधितशोकार्तश्रान्तप्रदुष्टधातुगर्भिणीज्वरितातिक्षीणातिस्थूलविदग्धभक्तविरुद्धाहारतर्पितायाः स्तन्यं पाययेत् ।

- सुश्रुतसंहिता

பசித்தவள், துயரம் கொண்டவள், களைப்படைந்தவள், நோயுற்றவள், கருத்தரித்தவள், ஜ்வரமுள்ளவள், மிகவும் இளைத்த உடல் உடையவள், மிகவும் பருத்த உடம்புள்ளவள், உண்ட உணவு ஜீர்ணமாகாமல் புளிப்புத்தன்மை அடைந்த நிலையிலுள்ளவள், சேர்க்கை, செய்முறை முதலியவற்றால் பொருந்தாத உணவுப்பொருட்களை உண்டவள், இவர்களின் பாலைப் பருகச் செய்யலாகாது. (ஸுச்ருதஸம்ஹிதா)

தாய்ப்பாலுக்கு மாற்றுப்பால் -

स्तन्याभावे पयश्छागं गव्यं वा तद्गुणं पिबेत् ।
मूलैस्सिद्धं बृहत्योर्धैः स्थिराभ्यां वा सितायुतम् ॥

- अष्टाङ्गसंग्रहः

தாய்ப்பால் இல்லாவிடில் வெள்ளாட்டின் பாலைப் பருகவேண்டும். அல்லது கண்டங்கத்திரி, முள்ளங்கத்திரி, ஓரிலை, மூவிலை, நெருஞ்சில் இவற்றின் வேர்கள் சேர்த்தாவது; ஓரிலை, மூவிலை இவற்றை சேர்த்தாவது பக்குவம் செய்வதால் ஆட்டுப் பாலின் குணத்தைப் பெற்ற பசுவின் பாலை சர்க்கரை சேர்த்துப் பருகவேண்டும். (அஷ்டாங்கஸங்கிரஹம்)

இவ்வாறு கூறுவதால் ஆட்டுப்பாலுக்கு இயற்கையாகவே தாய்ப்பாலின் தன்மை அமைந்துள்ளதெனத் தெரிகிறதல்லவா.

வெள்ளாட்டுப்பாலின் குணம் -

छागं कषायमधुरं शीतं ग्राहि पयो लघु ।
रक्तपित्तातिसारघ्नं क्षयकासज्वरापहम् ॥ - चरकसंहिता

வெள்ளாட்டுப்பால் துவர்ப்பு, இனிப்பு ஆகிய சுவைகளுடையது. குளிர்மையானது. இளகிப்போகும் மலத்தை கட்டக்கூடியது. சுகமாக ஜீர்ணமாகக்கூடியது. ரக்தபித்தம் (கண், காது, மூக்கு, வாய், மலத்துவாரங்கள்,

மயிர்க்காம்புகள் இவற்றின் வழியாக ரக்தம் கசியுதல்) க்ஷயம், இருமல், ஜ்வரம் இவற்றைப் போக்குகிறது.

(சரகஸம்ஹிதா)

ஆட்டுப்பாலை துணியில் வடிகட்டி பிறகு காய்ச்சி பயன்படுத்தவேண்டும்.

குழந்தையின் வீட்டமைப்பு -

प्रशस्तवास्तु शरणं सज्जोपकरणं शुचि ।

निर्वातं च प्रवातं च वृद्धस्त्रीवैद्यसेवितम् ॥

निर्मत्कुणाखुमशकमतमस्कं च शस्यते । -अष्टाङ्गसंग्रहः

குழந்தை தங்குவதற்கு மனை சாஸ்திரப்படி சிறந்த தாகவும், உபகரணங்களைத் தயார்நிலையில் கொண்ட தாகவும், சுத்தமாகவும், காற்றடக்கமுள்ளதாகவும் மறுபகுதியில் நல்ல காற்றோட்டத்தைக்கொண்ட தாகவும், வயது முதிர்ந்த மாதர்களாலும், வைத்தியர் களாலும் சூழப்பட்டதாகவும் மூட்டைப்பூச்சி, எலி, கொசு ஆகியவையற்றதாகவும், இருளற்றதாகவும் இருக்கும் வீடு சிறந்தது. (அஷ்டாங்கஸங்கிரஹம்)

குழந்தைக்கு படுக்கையும், உடுப்பும் -

अथ बालं क्षौमपरिवृतं क्षौमवस्त्रास्तृतायां शय्यायां शाययेत् ।

-सुश्रुतसंहिता

குழந்தையை பட்டு வஸ்திரமுடுத்தி, பட்டு வஸ்திர விரிப்புள்ள படுக்கையில் படுக்கவைக்க வேண்டும்.

(ஸுச்ருதஸம்ஹிதா)

குழந்தைக்கு வீசுதல் -

पीलुबदरीनिम्बपरूषकशाखाभिश्चैनं परिवीजयेत् ।

-सुश्रुतसंहिता

உகை, இலந்தை, வேம்பு, சிற்றீச்சை இவற்றின் சிறு கிளைகளால் குழந்தைக்கு வீசவேண்டும்.

(ஸுச்ருதஸம்ஹிதா)

வேப்பிலை, அம்மைபோன்ற தொத்துநோய் களைத் தடுக்கும் தன்மை வாய்ந்தது என்று நவீன மருத்துவ விஞ்ஞானிகள் கண்டுள்ளனர்.

குழந்தைக்குப் புகையிடல் -

धूपयेच्चैनं रक्षोघ्नैर्धूपैः । - सुश्रुतसंहिता

ரெ[illegible]ளப் போக்கும் தன்மையுள்ள (கடுகு, வசம்பு, குக்கில் முதலிய) புகைப் பொருட்களால் குழந்தைக்குப் புகை இடவேண்டும். (ஸு[illegible]ருதஸம்ஹிதா)

குழந்தையின் படுக்கை முதலியவற்றின் சுத்தி-

शय्यास्तरणप्रावरणानि स्वेदमलजन्तुमन्ति मूत्रपुरीषोप-सृष्टानि च वर्ज्यानि स्युः । असति संभवेऽन्येषां तान्येव च सुप्रक्षालितोपधानानि सधूपितानि शुद्धशुष्काणि उपयोग गच्छेयुः । -चरकसंहिता

வியர்வை, அழுக்கு, கிருமிகள் ஆகியவற்றைக் கொண்டதும் சிறுநீர், மலம் இவற்றால் கேடுற்றதுமான குழந்தையின் படுக்கை, விரிப்பு, போர்வை ஆகியவற்றை அகற்ற வேண்டும். இவற்றை மாற்றி அமைக்க இயலாவிடில் அவையே நன்கு துவைக்கப்பட்ட தலையணையையுடையவையாகவும், நன்கு புகை இடப்பட்டவையாகவும், சுத்தமானவை யாகவும், நன்கு காய்ந்தவையாகவும் செய்யப்பெற்று பயன்படுத்தவேண்டும். (சரகஸம்ஹிதா)

குழந்தையின் ஆடைகளுக்குப் புகையிடல்-

धूपनानि पुनर्वाससां शयनास्तरणप्रावरणानां च यवसर्ष-पातसीहिंगुगुग्गुलुवचाचोरकवयस्थागोलोमीजटिलापलङ्कषाऽशोकरो-हिणीसर्पनिर्मोकाणि घृतयुक्तानि स्युः । - चरकसंहिता

குழந்தையின் ஆடைகள், படுக்கை, விரிப்பு போர்வை ஆகியவற்றிற்குப் புகையிட யவை, கடுகு,

ஆளிவிதை, பெருங்காயம், குக்கில், வசம்பு, கஸ்தூரி மஞ்சள், பிரம்மி, அரக்கு, ஜடாமாஞ்சி, கடுகுரோகிணி, பாம்புசட்டை ஆகியவற்றை நெய் கலந்து பயன்படுத்த வேண்டும். (சரகஸம்ஹிதா)

நெய்ப் புகை நோய்க்கிருமிகளை அழிக்கும் சக்தி வாய்ந்ததென்று நவீன மருத்துவ விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

குழந்தைக்குப் பெயர் சூட்டல் -

दशमे दिवसे पूर्णे विधिभिः स्वकुलोचितैः ।
कारयेत् . . . . नाम बालस्य चार्चितम् ॥
नक्षत्रदेवतायुक्तं बान्धवं वा समाक्षरम् । -अष्टाङ्गहृदयम्
दिने शततमे वाऽऽख्यां पूर्णे संवत्सरेऽथ वा । -अष्टाङ्गसंग्रहः

பத்து நாட்கள் நிரம்பியபின் (பதினோராவது நாளில்) தன்குலத்தின் பழக்கத்தையொட்டிய முறைப்படி குழந்தைக்கு, பூஜிக்கப்பெற்றதும், நக்ஷத்திர தேவதையின் பெயருடனாவது, பந்துக்களின் பெயருடனாவது கூடியதும், இரட்டை எழுத்துக்களைக்கொண்டதுமான பெயரை சூட்டவேண்டும். (அஷ்டாங்கஹிருதயம்)

அல்லது நூறாவது நாளிலாவது, ஓராண்டு நிறைந்த பிறகாவது குழந்தைக்குப் பெயரைச் சூட்டலாம். (அஷ்டாங்கஸங்கிரஹம்)

குழந்தைக்குப் புனித மூலிகைகளை அணிவித்தல் -

धारयेदौषधीः श्रेष्ठाः . . . . ।
हस्ताभ्यां ग्रीवया मूर्ध्ना विशेषात्सततं वचाम् ॥
आयुर्मेधास्मृतिस्वास्थ्यकरीं रक्षोभिरक्षिणीम् ॥ -अष्टाङ्गहृदयम्

குழந்தைக்குக் கைகள், கழுத்து தலை இவற்றில் சிறந்த மூலிகைகளை (பிரம்மி முதலியவை)

அணிவிக்கவேண்டும். விசேஷமாக ஆயுள், அறிவு நினைவாற்றல், நோயற்ற வாழ்வு இவற்றை உண்டாக்கக்கூடியதும், கிரகங்களிலிருந்து காக்கக் கூடியதுமான வசம்பை அணிவிக்க வேண்டும்.

(அஷ்டாங்கஹிருதயம்)

வசம்பைச் சிறிதளவில் தங்கம் அல்லது வெள்ளியினால் செய்த தாயத்தில் அடைத்து அரைநாணிற் கோர்த்து குழந்தையின் அரையில் கட்டுவது மிகவும் நல்லது.

குழந்தைக்கு இரத்தினங்கள் முதலியவற்றை அணிவித்தல் -

मणयश्च धारणीयाः । कुमारस्य खड्गरुरुगवयवृषभाणां जीवतामेव दक्षिणेभ्यो विषाणेभ्योऽग्राणि गृहीतानि स्युः ।

-चरकसंहिता

குழந்தைக்கு இரத்தினங்களை அணிவிக்க வேண்டும். மேலும் காண்டாமிருகம், கருப்புக் கோடுகளுடைய மான், காளை இவற்றின் வலது கொம்புகளின் நுனிகளை அவை உயிருடனிருக்கை யிலேயே சேகரித்து குழந்தைக்கு அணிவிக்க வேண்டும்.

(சரகஸம்ஹிதா)

குழந்தையை நான்காவது மாதத்தில் கோயிலுக்கு அழைத்துச் செல்வது

चतुर्थे सूतिकागारादग्निस्कन्दपुरोगमान् ।
मासे निष्क्रामयेद्देवान् नमस्कर्तुं स्वलंकृतम् ॥ - अष्टाङ्गसंग्रहः

நான்காவது மாதத்தில் பிரசவ வீட்டிலிருந்து நன்கு அலங்கரித்த குழந்தையை அக்னி, முருகன் முதலிய தெய்வங்களை வழிபடுவதற்காக அழைத்துச் செல்ல வேண்டும். (அஷ்டாங்கஸங்கிரஹம்)

குழந்தையைத் தரையில் உட்காரவைப்பது

पञ्चमे मासि पुण्येऽह्नि धरण्यामुपवेशयेत् । -अष्टाङ्गहृदयम्

குழந்தையை ஐந்தாவது மாதத்தில் நன்னாளில் தரையில் உட்காரவைக்கவேண்டும்.

(அஷ்டாங்க ஹிருதயம்)

ஐந்தாவது மாதத்திற்குமுன் விரிப்பெதுவுமின்றி தரையில் படும்படி குழந்தையை விடக்கூடாதென்பது கருத்து.

குழந்தையை வெகுநேரமுட்காரவைப்பதின் தீங்கு-

उपविष्टं सकृच्चैनं न चिरात् स्थापयेद्बुधः ।
स्तैमित्यं कटिदौर्बल्यं पृष्टभङ्गः श्रमो ज्वरः ॥
विण्मूत्रानिलसंरोधाध्मानं चात्युपवेशनात् ॥

-काश्यपसंहिता

ஒரே தடவையில் உட்கார்ந்த நிலையில் குழந்தையை வெகுநேரமிருக்கச் செய்யக்கூடாது. இவ்வாறு வெகுநேரம் உட்காரவைப்பதால் திமிர் இடுப்பு இவை பலவீனம் அடைதல், களைப்பு, ஜ்வரம், மலம், மூத்திரம், வாயு இவற்றின் தடை, உப்புசம் ஆகியவை உண்டாகின்றன. (காச்யபஸம்ஹிதா)

குழந்தைக்கு அன்ன மூட்டுதல் -

षष्ठेऽन्नप्राशनं मासि क्रमात्तच्च प्रयोजयेत् । -अष्टाङ्गसंग्रहः

ஆறாவது மாதத்தில் குழந்தைக்கு அன்னமூட்ட வேண்டும். அதையும் படிப்படியாக ஊட்டவேண்டும்.

(அஷ்டாங்கஹிருதயம்)

குழந்தைக்குப் பழங்களைக் கொடுப்பது

तस्मिन्नेव मासि विविधानां फलानां प्राशनं भिषगनुतिष्ठेत् ।

-काश्यपसंहिता

ஆறாவது மாதத்திலேயே வைத்தியன் பலவகைக் கனிகளையும் குழந்தையை உட்கொள்ளச் செய்ய வேண்டும். (காச்யப ஸம்ஹிதா)

குழந்தைக்குக் காது குத்தல் -

रक्षाभूषणनिमित्तं बालस्य कर्णौ विध्येते । तौ षष्ठे मासि सप्तमे वा शुक्लपक्षे प्रशस्तेषु तिथिकरणमुहूर्तनक्षत्रेषु कृतमङ्गलस्वस्तिवाचनं धात्र्यङ्के कुमारधराङ्के वा कुमारमुपवेश्य बालक्रीडनकैः प्रलोभ्याभिसान्त्वयन् भिषग्वामहस्तेनाकृष्य कर्णं दैवकृते छिद्रे आदित्यकरावभासिते शनैः शनैः दक्षिणहस्तेन ऋजु विध्येत्, पूर्वं दक्षिणं कुमारस्य वामं कुमार्याः ततः पिचुवर्तिं प्रवेशयेत् । -सुश्रुतसंहिता

குழந்தையின் பாதுகாப்பிற்காகவும், அலங்காரத்திற்காகவும், காதுகள் குத்தப்படுகின்றன. ஆறாவது அல்லது ஏழாவது மாதத்தில் வளர்பிறையில் திதி, கரணம், முகூர்த்தம், நக்ஷத்திரம் ஆகியவை சிறந்து அமைந்த நாளில் மங்களம், ஆசீர்வாதம் ஆகியவற்றை அடைந்த குழந்தையை தாதியின் மடியிலாவது குழந்தையை வைத்துக்கொள்ள அமர்த்தப்பட்டவனின் மடியிலாவது உட்காரவைத்து குழந்தையின் விளையாட்டுப் பொருட்களால் மனத்தை மாற்றி, ஸமாதானப்படுத்திக் கொண்டு வைத்தியன் இடது கையால் காதை இழுத்து ஸூர்ய ஒளியால் தெளிவாகத்தெரியும் தைவிகத் துவாரத்தில் மெதுவாக வலது கையால் நேராகக் குத்தவேண்டும். பிறகு துவாரத்தில் நெய்ப்புப் பொருளில் தோய்த்த பஞ்சுத் திரியை அந்தத் துவாரத்தில் செலுத்த வேண்டும். *(ஸுச்ருதஸம்ஹிதா)*

காது உரிய இடத்தில் குத்தப்பட்டதின் குறி -

स्थाने व्यधान्न रुधिरं न रुग्रागादिसंभवः । -अष्टाङ्गहृदयम्

உரிய இடத்தில் (தைவிக துவாரத்தில்) காதைக் குத்துவதால் இரத்தம் கசிவதில்லை. வலி, செந்நிறம் முதலியவை தோன்றா. (அஷ்டாங்கஹிருதயம்)

குழந்தைக்குக் காதில் இரத்தினங்களை அணிவித்தல் -

कलधौतावबद्धानि कर्णे रत्नानि निक्षिपेत् । -अष्टाङ्गसंग्रहः

தங்கத்தில் இணைக்கப்பட்ட இரத்தினங்களைக் குழந்தையின் காதில் போடவேண்டும்.

(அஷ்டாங்கஸங்கிரஹம்)

தாய்ப்பால் பருகுவதை நிறுத்த ஏற்ற காலம் -

अथैनं जातदशनं क्रमादपनयेत् स्तनात् ।

पूर्वोक्तं योजयेत्क्षीरमन्नं च लघु बृंहणम् ॥ - अष्टाङ्गहृदयम्

பல் தோன்றியுள்ள குழந்தையைப் படிப்படியாக முலைப்பால் குடிப்பதிலிருந்து விடுவிக்கவேண்டும். முன் கூறப்பெற்ற பாலையும் (ஆட்டுப்பால்) எளிதில் செரிக்கக் கூடியதும், உடல் வளர்ச்சியைத் தருவதுமான அன்னத்தையும் தரவேண்டும். (அஷ்டாங்கஹிருதயம்)

குழந்தையைத் தாய்ப்பாலிலிருந்து விடிவிக்கும் வழி -

कुर्यादपस्तनं स्नेहसंक्रान्त्या स्तनलेपनैः ।

बीभत्सैर्याविकासेककृत्रिमक्षतदर्शनैः ॥ - अष्टङ्गसंग्रहः

மார்பகத்தில் நெய்ப்புப் பொருளைப் பூசுவதாலும், அருவருப்பை உண்டாக்கக்கூடிய பொருளைப் பூசுவதாலும், அரக்கைத் தடவுவதாலும், முலையில் செயற்கைக் காயத்தைக் காட்டுவதாலும், குழந்தை தாய்ப்பாலை விடும்படிச் செய்ய வேண்டும்.

(அஷ்டாங்கஸங்கிரஹம்)

குழந்தைக்கு பல் தோன்றும் காலம் -

स दीर्घायुषोऽष्टमान्मासात्परतो वा प्रवर्तते । इतरेषां तु चतुर्थात्, ते ह्यतिबाल्ये दन्तोत्पादवेदनयाऽतिपीडिताः न सम्यक् संपूर्णधातुबलाः भवन्ति । -अष्टाङ्गसंग्रहः

நீண்ட ஆயுளுடைய குழந்தைக்கு எட்டாவது மாதத்திலாவது அதற்குப் பிறகாவது பல் தோன்றுகிறது. மற்றவர்களுக்கு நான்காவது மாதத்திலிருந்தே பல் தோன்று கிறது. அந்தக் குழந்தைகள் இளமையிலேயே பல் தோன்று வதால் உண்டாகும் வேதனையால் மிகவும் பீடிக்கப் படுவதால் நன்கு முழுமையாக ரக்தம் முதலிய தாதுக்களின் வலுவைப் பெறுவதில்லை. (பலவீனமான உடலுடையவர் களாக ஆகின்றனர்). (அஷ்டாங்கஸங்கிரஹம்)

ஆகவே இவ்விதமான குழந்தைகளை மிக்க கருத்துடன் கண்காணித்து வலுவூட்டும் உணவு முதலியவற்றைக் கொடுத்து வளர்க்கவேண்டும்.

நான்காவது முதலிய மாதங்களில் பல் தோன்றுவதன் விளைவு-

चतुर्थे मासि दन्ता निषिक्ता दुर्बला भवन्त्याशु क्षयिणश्चामयबहुलाश्च, पञ्चमे स्यन्दनाश्च प्रहर्षिण-श्चामयबहुलाश्च, षष्टे प्रतीपाश्च मलग्राहिणश्च विवर्णाश्च घुणदन्ताश्च भवन्ति । सप्तमे द्विपुटाः स्फोटिनश्च राजिमन्तश्च खण्डाश्च रूक्षाश्च विषमाश्चोन्नताश्च भवन्ति । - काश्यपसंहिता

நான்காவது மாதத்தில் தோன்றும் பற்கள் பலவீனமானவையாகவும், தேய்பவையாகவும், அதிக நோயுற்றவையாகவும் அமைகின்றன. ஐந்தாம் மாதத்தில் தோன்றும் பற்கள் கரையுமியல்புடையன வாகவும், கூச்சமுடையவையாகவும், மிக நோயுற்றவை யாகவும் அமைகின்றன. ஆறாவது மாதத்தில் தோன்றும் பற்கள் தெத்திய பற்களாகவும், அழுக்கடைந்தவை யாகவும், நிறம், மாறியவையாகவும், பூச்சிப் பற்களாகவும் அமையும். ஏழாவது மாதத்தில் தோன்றும் பற்கள் இரண்டடுக்கு களாகவும், வெடிப்புள்ளவை யாகவும், கோடுகள் உடையனவாகவும், துண்டு களாகவும், வறண்டவை யாகவும், மேடுபள்ளம் பொருந்தியவை யாகவும் மேல் எழும்பியவையாகவும் அமைகின்றன. எட்டாவது மாதத்தில் தோன்றும் பற்கள் எல்லா நற்குணங்களும் உடையவையாக அமைகின்றன. (காச்யப ஸம்ஹிதா)

ஆண், பெண் குழந்தைகளுக்குப் பல் தோன்றுவதில் விசேஷங்கள் -

तत्र कुमारीणामाशुतरमल्पाबाधकरं च दन्तजन्म, सुषिरत्वाद्दन्तानां मृदुभावाच्च, प्रकृष्टकालमाबाधाबहुलं तु कुमाराणामाचक्षते, घनत्वाद्दन्तानां स्थिरस्वभावाच्च। -काश्यपसंहिता

பெண் குழந்தைகளுக்குப் பல் தோன்றுதல் பற்கள் உட்புறம் அழுத்தமின்றி இருப்பதாலும், மென்மையான இயல்புடையவையாக இருப்பதாலும், விரைவில் உண்டாகின்றன. வேதனையையும் குறைவாகவே உண்டு பண்ணுகின்றன. ஆண் குழந்தைகளுக்கோ வெனில் பற்கள் கனமானவையும், உறுதியானவையுமாவதால் தோன்று வதற்கு வெகு காலமாகிறது. (காச்யபஸம்ஹிதா)

குழந்தை பல்லுடன் பிறந்தால் சாந்தி செய்யவேண்டும்-

सदन्तो जायते यस्तु दन्ताः प्राग्यस्य चोत्तराः ।
कुर्वीत तस्मिन्नुत्पादे शान्तिं . . . . . . ॥ -अष्टाङ्गहृदयम्

குழந்தை பல்லுடன் பிறந்தாலும், குழந்தைக்கு முதலில் மேல் வாய்ப்பற்கள் தோன்றினாலும், அந்த அவக்குறியில் சாந்தி செய்யவேண்டும்.

(அஷ்டாங்கஹிருதயம்)

பல் தோன்றுதல் எல்லா நோய்களையும் விளைவிக்கும் -

दन्तोद्भेदश्च रोगाणां सर्वेषामपि कारणम् ।
विशेषाज्ज्वरविड्भेदकासच्छर्दिशिरोरुजाम् ॥ -अष्टाङ्गहृदयम्

பல் தோன்றுதல் பொதுவாக எல்லா நோய்களுக்கும், விசேஷமாக ஜ்வரம், பேதி, இருமல், வாந்தி, தலைவலி ஆகிய நோய்களுக்கும் ஏதுவாகும். (அஷ்டாங்கஹிருதயம்)

பல் தோன்றும் நாட்களில் குழந்தைக்கு அதிகக் கட்டுப்பாடு தேவையில்லை

दन्तोद्भेदश्च रोगेषु न बालमतियन्त्रयेत् ।
स्वयमप्युपशाम्यन्ति जातदन्तस्य यद्गदाः ॥-अष्टाङ्गहृदयम्

பல் தோன்றும் நாட்களில் குழந்தையை மிகக் கட்டுப்படுத்தவேண்டயது இல்லை. ஏனெனில் பல் தோன்றியபின் நோய்கள் தானாகவேயும் அடங்குகின்றன. (அஷ்டாங்கஹிருதயம்)

குழந்தைக்குத் தினந்தோறும் எண்ணெய் தேய்த்தல் முதலியவை

अभ्यङ्गोद्वर्तनस्नानं प्रत्यहं च समाचरेत् । -अष्टाङ्गसंग्रहः

குழந்தைக்குத் தினந்தோறும் எண்ணெய் தேய்த்தல், பொடி தேய்த்தல், குளிப்பாட்டுதல் ஆகியவற்றை நாள்தோறும் செய்யவேண்டும். (அஷ்டாங்க ஸங்கிரஹம்)

குழந்தைக்கு எண்ணெய் தேய்ப்பதற்கு "பலாதான்வந்தரதைலம்" (बलाधान्वन्तरतैलम्) என்னும் தைலத்தைப் பயன்படுத்துவது மிகவும் சிறந்தது.

குழந்தைக்குத் தேய்க்கும் பொடி -

मूर्वामूलद्विरजनीयवैश्चोद्वर्तनं हितम् ।

कुलत्थचूर्णमेकं वा वाजिगन्धारजोऽपि वा ॥ - अष्टाङ्गसंग्रहः

பெருங்குரும்பைவேர், மஞ்சள், மரமஞ்சள், யவை இவற்றால் பூசித் தேய்த்தல் இதமானது. தனித்த கொள்ளுத்தூள் அல்லது தனித்த அமுக்கிராக் கிழங்கின் தூளும் இதமானதே. (அஷ்டாங்கஸங்கிரஹம்)

குழந்தைக்கு சாளவாய்நீர் போக்கும் வழி

माक्षिकामलकव्योपबृहतीमूलसैन्धवाः ।

लालापनोदरुच्यर्थं मुखमन्तः परामृशेत् ॥ -अष्टाङ्गसंग्रहः

சாளவாய்நீரை அகற்றுவதற்கும், சுவையுண்டாவதற்கும் குழந்தையின் வாயினுள் நெல்லிமுள்ளி, சுக்கு, மிளகு, திப்பிலி, கண்டங்கத்திரிவேர், இந்துப்பு இவற்றின் தூளைத் தேனில் குழைத்துத் தடவவேண்டும். (அஷ்டாங்கஸங்கிரஹம்)

குழந்தையை ஒரு வருடத்திற்குள் வெளியே கொண்டு செல்லலாகாது

वर्षं स्ववसतेर्बाह्यं कुमारस्य न दर्शयेत् । -अष्टाङ्गसंग्रहः

குழந்தைக்குத் தன்னிருப்பிடத்தையன்றி வெளியே யுள்ள பகுதிகளை ஓராண்டுவரை காண்பிக்கக்கூடாது.

(அஷ்டாங்கஸங்கிரஹம்)

குழந்தையைத் தீடிரென்று எழுப்புதல் முதலியவை கூடாது-

बोधयेत्सहसा सुप्तं नो न चैनं समुत्क्षिपेत् ।
तथा ह्यस्य समुत्त्रासो वेगरोधश्च जायते ॥ - अष्टाङ्गसंग्रहः

தூங்குகின்ற குழந்தையைத் திடீரென்று எழுப்பலாகாது. திடீரென்று மேலே தூக்கவும் கூடாது. இவ்வாறு குழந்தையைத் திடீரென்று எழுப்புவதாலும், தூக்குவதாலும் குழந்தைக்குப் பயமும், மலம் மூத்திரம் முதலியவற்றின் தடையுமுண்டாகின்றன.

(அஷ்டாங்க ஸங்கிரஹம்)

குழந்தையைப் பேய்க்காற்று முதலியவற்றினின்று பாதுகாக்க வேண்டும்

वातातपविद्युत्प्रभाषादपलताशून्यागारनिम्नस्थानग्रहच्छाया-
दिभ्यो दुर्ग्रहोपसर्गतश्च बालं रक्षेत् ।

नाशुचौ विसृजेद्बालं नाकाशे विषमे न च ।
नोष्ममारुतवर्षेषु रजोधूमोदकेषु च ॥ - सुश्रुतसंहिता

குழந்தையைப் பேய்க்காற்று, வெயில், மின்னல், ஒளி, மரம், கொடி, காலிமனை, பள்ளம், கிரஹத்தின் நிழல் முதலியவற்றிலிருந்தும், துஷ்ட கிரஹங்களின் தாக்குதலிலிருந்தும் பாதுகாக்கவேண்டும். அசுத்தமான இடம், திறந்தவெளி, மேடு பள்ளமான இடம், வெப்பம், காற்று, மழை, புழுதி, புகை, தண்ணீர் ஆகியவற்றில் குழந்தையை விடக்கூடாது. *(ஸுச்ருதஸம்ஹிதா)*

குழந்தைக்குத் துணிக்காற்று முதலியவை தகாது

वस्त्रवातात्खरस्पर्शात्पालयेल्लङ्घनाच्च तम् । -अष्टाङ्गसंग्रहः

குழந்தையைத் துணிக்காற்று, கரடுமுரடான பரிசம், தாண்டுதல் இவற்றிலிருந்தும் பாதுகாக்க வேண்டும். (அஷ்டாங்கஸங்கிரஹம்)

குழந்தையை அழவிடக்கூடாது

रोदयेन्न क्वचित्कार्ये विधिमावश्यकं विना । -भावप्रकाशः

குழந்தையைத் தவிர்க்க முடியாத காரியத்திற்காக வன்றி வேறு எந்த காரியத்திற்காகவும் அழச்செய்யலாகாது. (பாவபிரகாசம்)

பல் இறுகுவதற்கு முன் பல் குச்சி தகாது

भक्षयेद्दन्तपवनं नास्थिरद्विजबन्धनः ।
तस्य तद्घट्टनात् क्रुद्धः कुर्याद्दन्तामयान् मरुत् । -अष्टाङ्गसंग्रहः

பல் ஈறு இறுகாத நிலையில் பற்குச்சியைப் பயன்படுத்தக்கூடாது. பற்குச்சி உராய்வதால் வாயு கோபமடைந்து பல் நோய்களை உண்டாக்கும். (அஷ்டாங்கஸங்கிரஹம்)

குழந்தையைப் பயமுறுத்தலாகாது

न ह्यस्य वित्रासनं साधु । तस्मात्तस्मिन् रुदत्यभुञ्जाने वाऽन्यत्र विधेयतामगच्छति ; राक्षसपिशाचपूतनाद्यानां नामान्याह्वयता कुमारस्य वित्रासनार्थं न कार्यम् । - चरकसंहिता

குழந்தையைப் பயமுறுத்தல் நல்லதல்ல. ஆகையால் குழந்தை அழுதாலும், உணவுகொள்ளா விடினும் மற்றும் கட்டுப்படாத நிலையிலும் குழந்தையைப் பயமுறுத்துவதற்காக அரக்கன், பிசாசு, பூதனை முதலியவர்களின் பெயர்களை அழைப்பது கூடாது. (சரகஸம்ஹிதா)

குழந்தையைப் பயமுறுத்துவதாலுண்டாகும் தீங்கு

. . . . . . त्रस्तं गृह्णन्ति हि ग्रहाः । -अष्टाङ्गसंग्रहः

பயமுற்ற குழந்தையை கிரஹங்கள் பிடித்துக் கொள்ளுகின்றன அல்லவா. (அஷ்டாங்கஸங்கிரஹம்)

குழந்தை விளையாடுமிடம்

क्रीडाभूमिस्समा कार्या निश्शस्त्रोपलशर्करा ।
वेल्लोषणकणाम्भोभिस्सक्ता निम्बोदकेन वा ॥ -अष्टाङ्गसंग्रहः

குழந்தைக்கு விளையாடுமிடம் மேடுபள்ளமற்றதாகவும், ஆயுதம், கற்கள், சிறுகற்கள் ஆகியவையற்றதாகவும், வாயு விடங்கம், மிளகு, திப்பிலி இவற்றின் கஷாயத்தினாலாவது வேப்பம்பட்டையின் கஷாயத்தினாலாவது நனைக்கப்பட்டதுமாகவும் அமைக்கப்பட வேண்டும். (அஷ்டாங்கஸங்கிரஹம்)

இந்த இடத்தின் மண்ணை குழந்தை தின்னாது. ஒரு சமயம் இந்த மண்ணைத் தின்றாலும் குழந்தைக்கு நோய்கள் தோன்றா.

குழந்தைக்கு விளையாட்டுப் பொருட்கள்

क्रीडनकानि खलु कुमारस्य विचित्राणि घोषवन्त्यभिरामाणि चागुरूणि चातीक्ष्णाग्राणि चानास्यप्रवेशीनि चाप्राणहराणि चावित्रासनानि स्युः। - चरकसंहिता

குழந்தையின் விளையாட்டுப் பொருட்கள் பல நிறங்களைக் கொண்டவையாகவும், ஒலியுடையவையாகவும், அழகியவையாகவும், கனமற்றவையாகவும், கூர்மையற்ற நுனி கொண்டவையாகவும், வாயினுள் நுழையாதவையாகவும், உயிருக்குத் தீங்கு விளைவிக்காதவையாகவும், பயமுண்டாக்காதவையாகவும் இருக்க வேண்டும். (சரகஸம்ஹிதா)

குழந்தையைத் தூக்குபவன்

अभियुक्तस्सदाचारो नातिस्थूलो न लोलुपः ।
कुमारधारः कर्तव्यस्तत्राद्यो बालचित्तवित् ॥
अधार्मिकं दुराचारः स्थूलो विकटगामिनम् ।
करोति लोलुपो बालं घस्मरत्वेन रोगिणम् ॥ -अष्टाङ्गसंग्रहः

அறிவாளியாகவும், நன்னெறியுள்ளவனாகவும் அதிகப் பருமனற்றவனாகவும், உணவில் பேராசை அற்றவனாகவும் இருப்பவனை குழந்தையைத் தூக்குபவனாக அமைக்க வேண்டும். அறிவுள்ளவன் குழந்தையின் மனநிலையை அறிவான். நன்னெறி யற்றவன் குழந்தையை தருமநெறியற்றவனாகவும், பருத்தவன் கோணலாக நடக்குமியல்புடையவனாகவும் உணவில் பேராசை கொண்டவன் குழந்தையை அதிக உணவு உண்ணச் செய்வதால் நோயாளியாகவும் செய்கின்றான். (அஷ்டாங்கஸங்கிரஹம்)

குழந்தையை மண்ணைத் தின்னாமல் காக்கவேண்டும்

नित्यं मृद्भक्षणाद्भक्षेत्तया स्युर्नियतं गदाः ।
पाण्डुत्वश्वयथुश्वासकासातीसारजन्तवः ॥
छर्दिर्मूर्च्छाग्निसदनस्तन्यद्वेषाङ्गरुग्भ्रमाः । -अष्टाङ्गसंग्रहः

எக்காலத்திலும் குழந்தையை மண்ணைத் தின்னாமல் பாதுகாக்க வேண்டும். மண்ணை உண்பதால் குழந்தைக்கு சோகை, வீக்கம், ச்வாஸம், இருமல், பேதி, கிருமி, வாந்தி, நினைவிழத்தல், பசித்தீக்குறைவு, தாய்ப்பாலில் வெறுப்பு, உடல்வலி, மயக்கம் ஆகிய நோய்கள் கண்டிப்பாக உண்டாகும். (அஷ்டாங்கஸங்கிரஹம்)

குழந்தையின் நோயை அறியும் வழி

स यं प्रदेशमभीक्ष्णं स्पृशति स्पर्शं च न क्षमते तत्र रुजमुपलक्षयेत् । निमीलिताक्षतया मूर्ध्नि रुजम् । जिह्वोष्ट-

दंशश्वासमुष्टिबन्धोर्ध्वेक्षणैर्हृदये । विण्मूत्रसङ्गच्छर्दिध्मानान्त्रकूजनस्तनदंशवेष्टनपृष्टविनमनजठरोन्नमनैर्जठरे । मूत्रसङ्गतृण्मूर्च्छोत्त्रासदिग्वीक्षणखल्लिहस्तपादस्तम्भकुब्जीभवनकेशलुञ्चनैर्वस्तौ गुह्ये च सर्वत्र च स्वभावातिरिक्तरोदनेन मुखविकूणनेन च । -अष्टाङ्गसंग्रहः

குழந்தை எந்த இடத்தை அடிக்கடி தானே பரிசித்துக்கொள்வதுடன் பிறர் பரிசித்தலை தாங்குவதில்லையோ அந்த இடத்தில் நோயைக் கண்மூடியிருத்தலாலும், இதயத்தில் நோயை நாக்கு, உதடு இவற்றைக் கடித்தல், ச்வாஸம், கைகளை முட்டியிட்டுக்கொள்ளல் மேலே பார்த்தல் ஆகியவற்றாலும் வயிற்றில் நோயை மலமூத்திரங்களின் தடை, வாந்தி, உப்புசம், குடல் இரைதல், மார்பகத்தைக் கடித்தல், புரளுதல் பின்புறம் வளைதல், வயிற்றை மேல்தூக்குதல் அகியவற்றாலும் சிறு நீர்ப்பை, ஆண்குறி அல்லது பெண்குறி இவற்றில் ஏற்படும் நோயை சிறுநீர்த்தடை, விடாய், மயக்கம், பயப்படுதல், திசைகளைப் பார்த்தல் கைகால் முடங்குதல், கைகால் தம்பித்தல், கூனுறுதல், கேசங்களை இழுத்தல் ஆகியவற்றாலும், பொதுவாக எல்லா இடங்களிலுமுள்ள நோய்களை இயற்கையை மீறிய அழுகையாலும், முகம் சுழித்தலாலும் அறியவேண்டும்.

(அஷ்டாங்கஸங்கிரஹம்)

குழந்தைக்கு மருத்துவம் செய்யும் முறை

रोगांश्चास्य जयेत्सौम्यैर्भेषजैरविपादकैः । -अष्टाङ्गहृदयम्

குழந்தைக்கு உண்டாகும் நோய்களைக் கடுமையற்றவையும், துன்புறுத்தாதவையுமான மருந்துகளால் போக்கவேண்டும். (அஷ்டாங்கஹிருதயம்)

குழந்தைக்குப் பேதிக்குக் கொடுப்பது தகாது

अन्यत्रात्ययिकाद्व्याधेर्विरेकं सुतरां त्यजेत्।

-अष्टाङ्गहृदयम्

உயிருக்கே கேடு விளைவிக்கும் நோய் நீங்கலாக குழந்தைக்கு பேதிக்குக் கொடுப்பதை மிகவும் தவிர்க்க வேண்டும். *(அஷ்டாங்கஹ்ருதயம்)*

குழந்தை தாய்ப்பாலைக் குடிக்காவிடில் மருத்துவம்

गृह्णाति सूतिकागारे न स्तनं चेत् स्पृशेत्ततः ।
पथ्या धात्रीफलकणैर्जिह्वां सघृतमाक्षकैः ॥ -अष्टाङ्गसंग्रहः

பிரசவித்த அறையில் குழந்தை முலையுண்ணாவிடில் கடுக்காய், நெல்லிமுள்ளி, திப்பிலி இவற்றின் தூளுடன் நெய்யும், தேனும் கலந்து நாவில் தடவவேண்டும். (அஷ்டாங்கஸங்கிரஹம்)

குழந்தைக்குப் பாரிகர்ப்பிகமென்னும் நோய்

मातुः कुमारो गर्भिण्याः स्तन्यं प्रायोऽपिबन्नपि ।
कासाग्निसादवमथुतन्द्राकार्श्यारुचिभ्रमैः ॥
युज्यते कोष्ठवृद्ध्या च तमाहुः पारिगर्भिकम् ।
रोगं परिभवाख्यं च युञ्ज्यात्तत्राग्निदीपनम् ॥ -अष्टाङ्गसंग्रहः

குழந்தை கருவுற்ற தாயின் பாலைக் குடித்தாலும், குடிக்காவிட்டாலும் இருமல், பசித்தீக்குறைவு, வாந்தி, சோம்பல், இளைப்பு, ருசியின்மை, மயக்கம், வயிற்று வீக்கம் இவற்றால் பாதிக்கப்பெறுவான். இந்நோயைப் பாரிகர்ப்பிகமென்றும், பரிபவமென்றும் கூறுவர். அந்நிலையில் பசித்தீயைத் தூண்டும் மருத்துவ முறைகளைக் கையாளவேண்டும். (அஷ்டாங்கஸங்கிரஹம்)

குழந்தையின் எல்லா நோய்களுக்கும் ரஜன்யாதி சூர்ணம்

रजनी दारु सरलश्रेयसीबृहतीद्वयम् ।
पृश्निपर्णी शताहा च लीढं माक्षिकसर्पिषा ॥
ग्रहणीदीपनं श्रेष्ठं मारुतस्यानुलोमनम् ।
अतीसारज्वरश्वासकामलापाण्डुकासजित् ॥
बालस्य सर्वरोगेषु पूजितं बलवर्णदम् । -अष्टाङ्गहृदयम्

மஞ்சள் வேர், தேவதாரு, ஸரளதேவதாரு, ஆனைத்திப்பிலி, முள்ளிவேர், கண்டங்கத்திரிவேர், ஓரிலை, சதகுப்பை இவற்றை (ஸம அளவு சேர்த்துத் தூள் செய்து வைத்துக் கொண்டு) தேனும், நெய்யும் கலந்து உட்கொள்ள பசியை விசேஷமாகத் தூண்டும். வாயுவைக் கீழ்நோக்கச் செய்யும். பேதி. ஜ்வரம், ச்வாஸம், காமாலை, சோகை, இருமல் இவற்றைப் போக்கும். உடலுக்கு வலுவையும், நிறத்தையும் கொடுக்கும். இந்த மருந்து குழந்தையின் எல்லா நோய்களிலும் கொண்டாடப்பட்டது.

இந்த மருந்து ஆயுர்வேத வைத்யர்களிடம் கிடைக்கும். இதற்கு "பாலாஷ்டகசூர்ணம்" (बालाष्टकचूर्णम्) என்று மற்றொரு பெயரும் உண்டு.

அழும் குழந்தைக்கு மருந்து

पिप्पलीत्रिफलाचूर्णं घृतक्षौद्रपरिप्लुतम् ।
रुदते त्रस्यते वापि लेहं दद्यात्सुखावहम् ॥ -अष्टाङ्गसंग्रहः

அழும் குழந்தைக்கும், பயமற்ற குழந்தைக்கும் திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி இவற்றின் தூளை நெய்யும், தேனும் கலந்து குழப்பி லேகமாகசெய்துகொடுக்க வேண்டும். இதனால் சுகமுண்டாகும். (அஷ்டாங்கஸங்கிரஹம்)

தொப்புள் கொடி விழுவதற்கு மருந்து

प्रदीप्ताङ्गाररजसा प्रशान्ते नावचूर्णयेत् ।
पञ्चमेऽह्न्यपतन्नालं . . . . ॥ -अष्टाङ्गसंग्रहः

தொப்புள்கொடி விழாவிடில் ஐந்தாவது நாளில் நன்றாக எரிந்து ஆறிய கரித்தூளால் தூவவேண்டும்.
(அஷ்டாங்கஸங்கிரஹம்)

புடைத்து எழுப்பிய தொப்புளுக்கு மருந்து

. . . . नालपातेऽपि चोन्नताम् ।
नाभिं छागेन शकृता दग्धेनान्तर्विचूर्णयेत् ॥ - अष्टाङ्गसंग्रहः

தொப்புள்கொடி விழுந்தபின்பும் தொப்புள் புடைத்து எழும்பியிருந்தால் ஆட்டின் புழுக்கையை எரித்து அதன் தூளை உட்புறமாகத் தூவவேண்டும்.
(அஷ்டாங்கஸங்கிரஹம்)

தொப்புள் புண்ணுக்கு மருந்து

यष्टीलोध्रनिशाश्यामाकल्कपक्वेन सेचयेत् ।
नाभिं पाके तु तैलेन तच्चूर्णैश्चावचूर्णयेत् ॥ -अष्टाङ्गसंग्रहः

தொப்புள் புண் ஏற்படின் தொப்புளை அதிமதுரம், பாச்சோற்றி, மஞ்சள், ஞாழல் இவற்றின் கல்கம் சேர்த்துக் காய்ச்சிய தைலத்தால் நனைக்கவேண்டும். அதிமதுரம் முதலியவற்றின் தூள்களைத் தூவவும் வேண்டும். (அஷ்டாங்கஸங்கிரஹம்)

குழந்தையின் உடலின் காந்தல் நிறத்திற்கு மருந்து

परिदग्धच्छविं बालं दिह्यान्मूर्वातिलोत्पलैः ।
शमीपत्रशिरीषत्वक्शारिबामधुकाभयैः ॥ -अष्टाङ्गसंग्रहः

காந்தியது போன்ற உடல் ஒளி இருக்கும் குழந்தைக்கு பெரும்குரும்பை, எள், கருங்குவளை,

வன்னியிலை, வாகைப்பட்டை, நன்னாரி, அதிமதுரம், விளாமிச்சவேர் இவற்றை அரைத்துப் பூசவேண்டும்.

(அஷ்டாங்கஸங்கிரஹம்)

குழந்தைக்குக் கிரஹங்களின் பீடையும் அதற்குப் பரிஹாரமும்

ग्रहैरपि हि जायन्ते प्रच्छन्नैर्व्याधयः शिशोः ।
कर्म शस्तमतस्तेषु दैवयुक्त्याश्रयं सदा ॥-अष्टाङ्गसंग्रहः

புலப்படாத கிரஹங்களால் குழந்தைக்கு நோய்கள் உண்டாகின்றன. ஆதலால் அந்த நோய்களில் இறை வழிபாடு முதலிய தெய்வீக சிகித்ஸையும், உத்தியை அனுசரித்த சிகித்ஸையும் ஏற்றவையாகும்.

(அஷ்டாங்கஸங்கிரஹம்)

கிரஹங்கள் பீடிப்பதற்கு முற்குறி

तेषां ग्रहीष्यतां रूपं प्रततं रोदनं ज्वरः । -अष्टाङ्गहृदयम्

தொடர்ந்து அழுகை, ஜ்வரம் ஆகியவை கிரகங்கள் பிடிப்பதன் முதற்குறியாகும். (அஷ்டாங்கஹிருதயம்)

கிரஹம் பிடித்ததின் பொதுக்குறி

सामान्यं रूपमुत्त्रासजृम्भाभ्रूक्षेपदीनताः ।
फेनस्रवोर्ध्वदृष्टयोष्ठदन्तदंशप्रजागराः ॥
रोदनं कूजनं स्तन्यविद्वेषः स्वरवैकृतम् ।
नखैरकस्मात्परितः स्वधात्र्यङ्गविलेखनम् ॥ -अष्टाङ्गहृदयम्

பயம், கொட்டாவி, புருவங்களை நெரித்தல், இரக்கத்தக்க நிலை, நுரை சொரிதல், மேல் நோக்கிய பார்வை, உதட்டைக் கடித்தல், பற்களைக் கடித்தல், கண்விழுப்பு, அழுகை, முனகல், தாய்ப்பாலில் வெறுப்பு, குரல் மாற்றம், காரணமின்றியே தன்னுடையவும், தாதியினுடையவும் உறுப்புக்களை நகங்களால் கீறல் ஆகியவை கிரஹங்கள் பிடித்ததின் பொதுக் குறிகளாகும்.

(அஷ்டாங்கஹிருதயம்)

கிரஹங்களைப் போக்கும் மருந்து

लीढं वा सघृतक्षौद्रं वचा हेमरजोऽल्पशः ।
संवत्सरं परं मेध्यं रक्षोघ्नं चाग्निवर्धनम् ॥ -अष्टाङ्गसंग्रहः

வசம்பு, தங்கம் இவற்றின் பொடியை குறைந்த அளவாக ஓராண்டுவரை நெய்யும் தேனும் கலந்து உட்கொள்வது மேதையை விசேஷமாக வளர்க்கும். கிரஹங்களையும் போக்கும். பசித்தீயையும் விருத்தி செய்யும். (அஷ்டாங்கஸங்கிரஹம்)

குழந்தையைப் படிப்பித்தல் முதலியவை

शक्तिमन्तं यथावर्णं विद्यामध्यापयेत्ततः ।
अनुशिष्यात्सदा चैनं धर्माय विनयाय च ॥
यथा नेन्द्रियदुष्टाश्वैर्ह्रियते यौवनागमे ॥ -अष्टाङ्गसंग्रहः

குழந்தைக்கு உரிய சக்தி ஏற்பட்ட நிலையில் அவரவரது இனத்திற்கேற்றவாறு கல்வியைக் கற்பிக்க வேண்டும். தருமநெறி, அடக்கம் இவையுண்டாவதற்காகவும், வாலிபத்தில் புலன்களாகிய கொடிய குதிரைகளால் இழுத்துச் செல்லப்படாமலிருப்பதற்காகவும் எப்பொழுதும் ஆணை இடவேண்டும்.

(அஷ்டாங்கஸங்கிரஹம்)

மணம் புரிதல்

अथ खलु पुमानेकविंशतिवर्षः कन्यामतुल्यगोत्रा-मतुल्याभिजनामसञ्चारिरोगकुलप्रसूतां रूपशीललक्षणसंपन्ना-मनूनामविनष्टदन्तोष्ठकर्णनखकेशस्तनीं मृदुमरोगप्रकृतिं द्वादशवर्षशीयामनघामनिन्द्यामनिद्येन विधिनोद्वहेत्। -अष्टाङ्गसंग्रहः

இருபத்தோரு வயதாகிய ஆண்மகன் வேறு கோத்திரத்தில் தோன்றியவளும் வேறு ஊரைச் சார்ந்தவளும், தொற்று நோயற்ற வம்சத்தில் பிறந்தவளும், அழகு, பண்பு,

நல்ல உடல் அமைப்பு இவற்றைக் கொண்டவளும், குறைவற்றவளும், ஊனமில்லாத பற்கள், உதடு, காது, நகம், கூந்தல், மார்பகம். இவற்றையுடையவளும், மென்மை கொண்டவளும், நோய் இயல்பற்றவளும், சுமார் பன்னிரண்டு வயதுள்ளவளும், குற்றமற்றவளும், இகழத் தகாதவளுமான கன்னியை இகழத்தகாத முறையில் மணக்கவேண்டும். (அஷ்டாங்கஸங்கிரஹம்)

மக்கட்பேற்றுக்கேற்ற வயது

तस्यां षोडशवर्षायां पञ्चविंशतिवर्षः पुरुषः पुत्रार्थं प्रयतेत तदा हि तौ प्राप्तवीर्यौ वीर्यवन्तमपत्यं जनयतः । -अष्टाङ्गसंग्रहः

பதினாறு வயதுள்ள பெண்ணிடம் இருபத்தைந்து வயதுள்ள ஆண்மகன் மக்கட்பேற்றுக்காக முயல வேண்டும். அந்த காலத்தில்தான் அவ்விருவரும் உரிய சக்தியைப் பெற்றவர்களாவதால் சக்தியுடைய மகவைப் பெறுவர். (அஷ்டாங்கஸங்கிரஹம்

குழந்தை பராமரிப்பு முற்றிற்று